
# கண்புரை அறுவை சிகிச்சைக்கு பின்பு கடைபிடிக்க வேண்டியவை

1



| | |
|---|---|
| 7 Day(s) / நாட்கள் (25-Dec-2021 - 31-Dec-2021) | 6 Time(s) a Day / வேளைகள் (7 am,10 am,1 pm,4 pm,7 pm,10 pm) |
| 7 Day(s) / நாட்கள் (01-Jan-2022 - 07-Jan-2022) | 5 Time(s) a Day / வேளைகள் (7 am,11 am,3 pm,6 pm,10 pm) |
| 7 Day(s) / நாட்கள் (08-Jan-2022 - 14-Jan-2022) | 4 Time(s) a Day / வேளைகள் (7 am,12 pm,5 pm,10 pm) |
| 7 Day(s) / நாட்கள் (15-Jan-2022 - 21-Jan-2022) | 3 Time(s) a Day / வேளைகள் (7 am,2 pm,10 pm) |
| 7 Day(s) / நாட்கள் (22-Jan-2022 - 28-Jan-2022) | 2 Time(s) a Day / வேளைகள் (7 am,7 pm) |

கொடுத்துள்ள அட்டவணைபடி நேரம் தவறாமல் சொட்டு மருந்தைப் போடவும்



கண்ணைத் துடைப்பதற்கு முன்பும் மருந்து போடுவதற்கு முன்பும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாகக் கழுவ வேண்டும்



தண்ணீரையும் பஞ்சையும் கொதிக்க வைக்கவும். கொதித்த தண்ணீரில் உள்ள பஞ்சை தண்ணீர் இல்லாமல் பிழியவும்



அந்தப் பஞ்சைக் கொண்டு மேல் இமையையும் கீழ் இமையையும் சுத்தம் செய்யவும்



மருந்து டப்பாவை ஊக்கு, குண்டூசி வைத்து திறக்கக்கூடாது



மருந்து டப்பா மூடியை அழுத்தி திறந்தாலே அது திறந்து கொள்ளும்



கண்ணின் கீழ் இமையை இழுத்துப் பிடித்து, கண் குழிக்குள் ஒரு சொட்டு மருந்து போட வேண்டும்



மருந்து போட்டபின் 1 நிமிடம் கண்களை மூடி இருக்கவும்



அறுவை சிகிச்சை செய்த கண் பக்கமாக 3 நாட்களுக்கு தலை சாய்ந்து படுக்கக்கூடாது



அறுவை சிகிச்சை செய்த கண்ணை கசக்கவோ துணி வைத்து தேய்க்கவோ கூடாது




1 மாதத்திற்கு பகலில் பாதுகாப்பு கண்ணாடி அணிந்து கொள்ளவும்



கண்புரை அறுவை சிகிச்சை செய்து 15 நாட்கள் வரை தினமும் கழுத்துக்கு கீழ் குளிக்கலாம்

# கண்புரை அறுவை சிகிச்சைக்கு பின்பு கடைபிடிக்க வேண்டியவை



15 நாட்கள் கழித்து ஷாம்பு தேய்த்து தலைக்குக் குளிக்கலாம்



உங்களது வழக்கமான உணவுகளை சாப்பிடலாம்; பத்தியம் தேவையில்லை



மற்ற நோய்களுக்கு எடுத்துக் கொள்ளும் மாத்திரைகளை வழக்கம்போல் சாப்பிடலாம்



6 மாதங்கள் வரை ஆறு, குளங்களில் குளிக்கக்கூடாது




கேஸ் அடுப்பு என்றால் 15 நாட்கள் கழித்து சமைக்கவும், விறகு அடுப்பு என்றால் 30 நாட்கள் கழித்து சமைக்கவும்.



வீட்டில் 1 வாரம் கழித்து ஷேவ் செய்து கொள்ளலாம். கடையில் 15 நாட்கள் கழித்து ஷேவ் செய்து கொள்ளலாம்.



சிகரெட், பீடி, மது, புகையிலை பயன்படுத்தக்கூடாது




15 நாட்கள் கழித்து படிப்பதும் எழுதுவது, டிவி பார்ப்பது போன்ற அன்றாட வேலைகளை செய்யலாம்.




மருத்துவர் குறிப்பிடும் நாளில் மறுபரிசோதனைக்கு வர வேண்டும்



மதிய நேரங்களில் கூட்டம் குறைவாக இருக்கும்; மதிய நேரங்களில் மறுபரிசோதனைக்கு வருவது நல்லது




மறுபரிசோதனை தேதியை மாற்ற விரும்பினால் Discharge Summary–இல் உள்ள தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்



கண்ணில் அதிக வலி, சிவப்பு மற்றும் திடீர் பார்வைக்குறைவு இருந்தால் உடனே மருத்துவமனைக்கு வரவேண்டும்